# அறிவு விருட்சம் வெளியீடு
# 2023
## ஆசிரியர் - சண்முகராஜ் சதீஸ்குமார்
## (Dip in Tech - Primary)

**வினாத்தாள் - 1**

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : ............................

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

**வினாத்தாள் - I இற்கான புள்ளித்திட்டம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **1.** | 3 | **11.** | 28 | **21.** | 53 | **31.** | 78 |
| **2.** | 5 | **12.** | 30 | **22.** | 55 | **32.** | 80 |
| **3.** | 8 | **13.** | 33 | **23.** | 58 | **33.** | 83 |
| **4.** | 10 | **14.** | 35 | **24.** | 60 | **34.** | 85 |
| **5.** | 13 | **15.** | 38 | **25.** | 63 | **35.** | 88 |
| **6.** | 15 | **16.** | 40 | **26.** | 65 | **36.** | 90 |
| **7.** | 18 | **17.** | 43 | **27.** | 68 | **37.** | 93 |
| **8.** | 20 | **18.** | 45 | **28.** | 70 | **38.** | 95 |
| **9.** | 23 | **19.** | 48 | **29.** | 73 | **39.** | 98 |
| **10.** | 25 | **20.** | 50 | **30.** | 75 | **40.** | 100 |


**85 - 100 மிக நன்று** ☐

**75 - 85 நன்று** ☐

**75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும்** ☐

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

01. பின்வரும் உரு பற்றிய சரியான கூற்று யாது ?




i. ஒரு கடிகாரமும் ஆறு மாணவர்களும் உள்ளனர்.

ii. பூச்சாடிகள் மூன்றும் ஏழு மாணவர்களும் உள்ளனர்.

iii. மூன்று மாணவர்களுக்கான இடம் இருந்தும் மூன்று மாணவர்கள் இல்லை


02.



மேல் உள்ள இரண்டு உருக்களுக்கும் இடையில் எத்தனை வேறுபாடுகள் காணப்படுகின்றன?

i. 05 ii. 06 iii. 04

03. கீழுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள பொருட்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்பினை கொண்டிருக்கக் கூடிய இடம்?



i. நீரோடை

ii. ஆறு

iii. கடல்

04. பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அந்த உருவைத் தெரிவு செய்க.

i.



ii.



iii.



05. 15வது ஒற்றை எண்ணையும், 15வது இரட்டை எண்ணையும் பெருக்கி வரும் விடையிலிருந்து 15வது முக்கோண எண்ணைக் கழித்தால் கிடைக்கும் பெறுமானம் யாது ?

i. 630 ii. 750 iii. 870

06. பாடசாலை இடைவேளையின் போது பிரதாப் சக மாணவர்களுடன் சேர்ந்து மாமரத்தில் ஏறி மாங்காய் பிடுங்கும் போது தவறி விழுந்து காயம் ஏற்பட்டது. அன்று முதல் பிரதாப் மரங்களில் ஏறுவதைத் தவிர்த்துக் கொண்டான். இதற்குப் பொருத்தமான பழமொழி.

i. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

ii. சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது

iii. தன்வினை தன்னை சுடும்.

07. தேன்கூடு ஒன்றில் உள்ள தேனீக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிமிடத்திற்கும் இரட்டிப்பாக மாறுகின்றது. அத்தேன் கூட்டில் மு.ப 9.57ற்கு ½ பகுதி தேனீக்கள் காணப்பட்டன. தேன்கூடு தேனீக்களால் நிரம்பியிருப்பது எத்தனை மணிக்கு?

i.பி.ப 9.58 ii.மு.ப 10.14 iii.மு.ப 9.58


08. கொடி வரிசையொன்றில் மூன்று மஞ்சள் நிறக் கொடிகளுக்கு இடையில் ஆறு பச்சை நிறக் கொடிகள் காணப்பட்டன. அக்கொடி வரிசையிலுள்ள மஞ்சள் நிற கொடிகளின் எண்ணிக்கை 15 எனின், வரிசையிலுள்ள பச்சை நிறக் கொடிகளின் எண்ணிக்கை யாது?

i. 84 ii. 42 iii. 90

09. “நீர்மேல் எழுத்துப்போல்” எனும் உவமைத் தொடருக்கான கருத்தாக அமைவது,

i.உடனிழிவு ii.உடன்தெரிதல் iii.உடனழிவு

10.





உருவில் காட்டப்பட்டுள்ள செவ்வக வடிவ அட்டடையிலிருந்து வெட்டி எடுக்க கூடிய ஒரு பக்க நீளம் 2cm ஆகக் கொண்ட சிறய சதுர அட்டைகளின் எண்ணிக்கை?

i. 12 ii. 20 iii. 16

11. அண்ணாவின் பெயர் அசிம் அல்ல. தம்பி என்னை வசிம் என்று அழைப்பார். அதன் படி எம்மூவரில் அசிம்

i.நான் ii.தம்பி iii.அண்ணா

12. 


i. 46 ii. 88 iii. 98

13. பாடசாலைக் காலைக்கூட்டத்தில் தெற்கு நோக்கி நின்று கொண்டிருந்த பிரபா வலதுபுறமாக அரைவட்டமாக திரும்பி முன்னோக்கி நடந்து சென்றான். அப்போது அவனது நிழல் தென்படுவது?

i.பிரபாவிற்கு வலக்கைப்பக்கம் ii.பிரபாவிற்கு இடக்கைப்பக்கம் iii.பிரபாவிற்கு முன்னால்

14. சிவாவிடமும்,குகனிடமும் சம அளவில் பணம் இருந்தது. சிவா தன்னிடமிருந்த பணத்தில் 12 பேனைகளையும் குகன் தன்னிடமிருந்த பணத்தில் 15 பென்சில்களையும் வாங்கினார்கள். பேனை ஒன்றின் விலை 15ரூபா எனின் பென்சில் ஒன்றின் விலை யாது?

i. 10 ii. 18 iii.12

15. வருடமொன்றில் ஆகஸ்ட் முதலாம் திகதிக்கும், அவ்வருடத்தின் சிறுவர் தினத்திற்கும் இடையில் உள்ள நாட்களின் எண்ணிக்கை?

i. 62 ii. 59 iii.60


16. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குப்படுத்தும் போது கிடைக்கும் விடை

A. கடித உறையில் இட்டு முகவரி எழுதினான்
B. கடிதத்தை அஞ்சல் பெட்டியில் இட்டான்.
C. நண்பனுக்கு கடிதமொன்றை எழுதினான்.
D. கடித உரையில் முத்திரையை ஒட்டினான்.

i.CABD ii.CADB iii. CDAB

17. நேற்று மழை பெய்தது. இன்றும் மழை பெய்கிறது. எனவே நாளையும் மழை பெய்யும். இக்கருத்துப் பற்றிய சரியான கூற்று

i.நிச்சயம் நடைபெறும் ii.சிலவேளை நடைபெறும் iii.நிச்சயம் நடைபெறாது

18. 


அருகில் உள்ள உரு எதன் அடிப்படையில் பாகுப்படுத்தப்பட்டுள்ளது?

i. கால்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலாகும்.
ii. உடற் பருமனின் அடிப்படையிலாகும்.
iii. உண்ணும் உணவின் அடிப்படையிலாகும்.


19. கணித பரீட்சையொன்றில் 100 வினாக்கள் காணப்பட்டன. அதில் சரியாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் 03 புள்ளிகள் வழங்கப்பட்டதுடன், பிழையாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் 02 புள்ளிகள் கழிக்கப்பட்டன. அப்பரிட்சையில் 175 புள்ளிகள் பெற்ற ரக்கீஷன் எத்தனை வினாக்களுக்கு சரியாக விடையெழுதி இருப்பார்?

i. 95 ii. 85 iii. 75

20. குறித்த புத்தகமொன்றில் 126 பக்கங்கள் உள்ளன. சபீஷ் அப்புத்தகத்தில் 34வது பக்கத்திலிருந்து 79வது பக்கம் வரை வாசித்தான். அதன்படி சபீஷ் வாசிக்காத பக்கங்களின் மொத்த எண்ணிக்கை?

i. 45 ii. 81 iii. 80

பின்வரும் உறவுமுறைகோட்டுப்படத்தைக் கொண்டு 21,22ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க




21. மேலுள்ள கோட்டுப்படத்தின்படி மனோ,சீதா தம்பதிகளுக்கு எத்தனை பிள்ளைகள்?

i. 05 ii. 03 iii. 08

22. பிரகாஷ் விமலனை என்ன உறவுமுறை கொண்டு அழைப்பார்?

i.மைத்துனன் ii.சித்தப்பா iii.அண்ணன்

23. கடந்த மாதத்திற்கு முதல் மாதம் தனது தந்தை வெளிநாடு சென்றதாக பிரசன்னா போன மாதத்திற்கு முதல் மாதம் கூறினான். பிரசன்னாவின் தந்தை வெளிநாடு சென்றது மே மாதம் என்றால் அடுத்த மாதத்திற்கு மறு மாதம் எது?

i.ஒக்டோபர் ii.செப்டெம்பர் iii.நவம்பர்

24. பின்வரும் பந்தியில் உள்ள இடைவெளிகளுக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடை யாது?

கவலைபடாதீர்கள் நடந்தது நடந்து விட்டது. எல்லாம் …………….. என்று மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள் ………………. வெற்றிக்கு முதற்படி. நாங்கள் எல்லோரும் உங்கள் அருகில் இருக்கும் போது நீங்கள் ஏன் ……………. வேண்டும். தைரியமாக இருங்கள்.


i. நன்மைக்கே முயற்சிதான் கவலைப்பட

ii. நன்மைக்கே தோல்விதான் களிப்படைய

iii. நன்மைக்கே தோல்விதான் கவலைப்பட

25. நவனீதன் 6m நாடாவில் இருந்து 2m50cm நாடாவை வெட்டிய பின்னர் எஞ்சிய நாடாவை 7 சம துண்டுகளாக வெட்டினான். அவற்றுள் இரு துண்டுகளின் நீளம் யாது?

i. 50cm ii. 2m iii. 1m

26. 


இச்சிறிய சதுரமுகிகளைக் கொண்டு ஒரு பெரிய சதுரமுகியை உருவாக்க மேலும் எத்தனை குறைந்தபட்ச சிறிய சதுரமுகிகள் தேவை?

i. 50 ii. 35 iii. 13

27. ஒரு கடிகார முகத்தில் தென்பட்ட நேரம் பி.ப 1.25 ஆகும். அவ்விடத்திலிருந்து நிமிடமுள் 7தடவை மணித்தியால முள்ளைக் கடந்து சென்று 9ஐ நோக்கி இருக்கும் போது அக்கடிகாரத்தின் நேரம் யாது?

i. பி.ப 7.45 ii. பி.ப 8.45 iii. பி.ப 9.45

28. அருகில் தரப்பட்டுள்ள உருவில் உள்ள வட்டங்களின் எண்ணிக்கை யாது?




i. 08 ii. 10 iii. 11

29. ஒரு பெட்டியில் உள்ள முட்டைகளில் 1 தடவையில் 05 முட்டைகள் எடுக்கும் சந்தர்ப்பத்தில் 02 முட்டைகள் பழுதடைந்து காணப்பட்டன. பெட்டியில் உள்ள முட்டைகளில் பழுதடைந்த முட்டைகள் 16 எனின் பெட்டியில் இருந்த முட்டைகள் எத்தனை?

i. 48 ii. 40 iii. 15


30. கீழ் உள்ள உருவில் பல்வேறு உயரங்களிலான மாணவர்கள் வரிசையில் நிற்கின்றனர். இவர்களை உயரத்தின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தும் போது ஆகக் குறைந்தது எத்தனை மாணவர்கள் இருக்குமிடம் மாற்றப்பட வேண்டும்?



i. 03

ii. 04

iii. 05

31. 


உருவில் காட்டப்பட்டுள்ள கம்பிச்சட்டகத்தில் சிவப்பு எறும்பு ஒன்று Aயிலிருந்து B வரையிலும் கறுப்பு எறும்பு ஒன்று Cயிலிருந்து D,E,F மற்றும் G ஊடாக H வரையிலும் பயணித்தன. அதன்படி இரு எறும்புகளும் பயணம் செய்த தூரங்களுக்கு இடையிலான வித்தியாசம் யாது?

i. 1 cm ii. 4 cm iii. 2 cm

32. நாணயமொன்றில் A,B என இரண்டு பக்கங்கள் உள்ளன. இந்நாணயம் 14 முறை சுண்டிவிடப்பட்டது. அதன்படி A பக்கம் விழக்கூடிய ஆகக்கூடிய தடவைகளின் எண்ணிக்கை?

i. 07 ii. 13 iii. 14


33. எட்வட் 2000ஆம் ஆண்டு தனது 10வது வயதில் புலமைப்பரிசில் பரீட்சை எழுதினான். எனின் அவன் பிறந்த ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டு, எத்தனையாம் தசாப்பதம்?

i. 20,10 ii. 21,01 iii. 20,9

34. நோயாளி ஒருவருக்கு 63 மாத்திரைகளை வழங்கப்பட்டு, அவற்றினை ஒரு நாளைக்கு காலையில் மூன்று மாத்திரையும் இரவில் நான்கு மாத்திரையும் அருந்த வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது. அவர் முதல் தடவையாக காலையில் மாத்திரை அருந்த ஆரம்பித்தார் எனில் அவர் காலை வேளைக்கான மாத்திரை அருந்தும் தடவைகள் எத்தனை?

i. 07 ii. 18 iii. 27

கீழ் உள்ள உருவில் தரப்பட்டுள்ள வீதியில் ஒவ்வொரு வளைவிலும் ஒரு மரம் வீதம் உள்ளது. A என்ற இடத்திலிருந்து வனப்பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ஒவ்வொரு மரத்திற்கும் ஒழுங்கு முறை படி இலக்கங்களை இட்டு சென்று B என்ற இடத்தை அடைந்தார்.




35. அவர் எத்தனை மரங்களுக்கு இலக்கங்களை எழுதி இருப்பார்?

i. 24 ii. 22 iii. 23

36. வனப்பாதுகாப்பு அதிகாரி வடக்கு திசையில் எத்தனை தடவைகள் சென்றிருப்பார்?

i. 12 ii. 08 iii. 04

37. கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றில் இறுதி போட்டிக்கு தெரிவான இராவணா அணி வீரர்கள் தமக்கிடையே கைலாகு செய்து கொண்டனர். எனில் அவர்களுக்கிடையே இடம்பெற்ற கைலாகுகள் எத்தனை?

i. 21 ii. 45 iii. 55

38. மு.ப 9.30ற்கு தொடங்கவிருந்த அறிவொளி கல்வியக கலை நிகழ்ச்சியானது மு.ப 11.45ற்கு தொடங்கி பி.ப 3.30ற்கு நிறைவடைந்தது, எனில் அந்நிகழ்ச்சி நடைபெற்ற காலம் எவ்வளவு?

i. 6மணித்தியாலம் ii. 3மணி 45நிமிடம் iii. 3மணி 30நிமிடம்

39. என்னிடமுள்ள பணத் தொகையின் இரு மடங்குடன் மேலும் ரூபா 30.00 தம்பியிடம் உள்ளது. தம்பியிடம் உள்ள பணத்தொகையின் 1/3 பங்குப்பணம் அக்காவிடம் உள்ளது. என்னிடம் ரூபாய் 45.00 உள்ளது எனின் மூவரிடமும் உள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு?

i.ரூபாய் 200.00 ii.ரூபாய் 180.00 iii. ரூபாய் 205.00

40. ஒரு நிகழ்வின் ஐந்து வரிகள் இடம்மாறி எழுதப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கு முறைக்குரிய விடையை கண்டு கீறிடுக.

01. இல்லை அது லொறியாகும்.

02. அது ஹட்டன் செல்லும் பஸ்வண்டி.சாமிமலைக்குப் போகும் பஸ் அல்ல.

03. பஸ் ஒன்று வருகிறது. எங்கு போகும் பஸ்வண்டியோ தெரியவில்லை.

04. வருவது பஸ் வண்டியா.

05. அதோ! சாமிமலை பஸ் வருகிறது. நாம் அதில் ஏறுவோம்.

i. 41325 ii. 51342 iii. 31245

பயிற்சியும் முயற்சியும் முன்னேற்றம் தரும்

# அறிவு விருட்சம் வெளியீடு

## 2023

**ஆசிரியர் - சண்முகராஜ் சதீஸ்குமார்**

**(Dip in Tech - Primary)**

## வினாத்தாள் - 2

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : ..............................

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **62** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன் | ........................................ பெயர் ........................................ ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் (..............................) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன். | ........................................ பெயர் ........................................ ஒப்பம் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர். மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன் | ........................................ பெயர் ........................................ ஒப்பம் |
| அதிபர் மேற்பார்வை செய்தேன் | |
| | |

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

அன்று பெருமழை பெய்து ஓய்ந்திருந்தது. கிராமம் முழுவதும் வெள்ளக் காடாகக் காட்சி அளித்தது. எம்மினத்தவரின் “டப் , டப்” எனும் சத்தம் கிராமத்தையே அதிர வைத்துக் கொண்டிருந்தது. நானும் என்னால் முடிந்தவரை “டப் , டப்” எனும் சத்தத்தை உற்சாகமாக எழுப்பிக் கொண்டிருந்தேன். நான் இருந்த இடத்தில் திடீரென எமது இனத்தவரின் சத்தம் குறைவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தேன். அங்கே ஒரு பெரிய பாம்பு எம்மினத்தவரை “லபக் லபக்” என விழுங்கிக் கொண்டு என்னை நோக்கி வந்து கொண்டிருந்தது. நான் தத்தித் தத்தி கல்லிடுக்கு ஒன்றினுள் ஒளிந்து கொண்டேன். பாம்பினால் அவ்விடத்திற்குள் வர முடியவில்லை. தப்பியதற்கு கடவுளுக்கு நன்றி கூறினேன்.

பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) பந்தியில் கூறப்படும் உயிரினம் எது? : ..........................................................

(ii) பந்தியில் வந்துள்ள பெயரடைமொழி ஒன்றினை எழுதுக? : .................................

(iii) சோர்வாக என்பதன் எதிர்சொல்? : ...............................................................

(iv) பந்தியில் வந்துள்ள அடுக்குமொழி ஒன்றினை எழுதுக? : ....................................

(V) பந்தியிலுள்ள நிறுத்தற் குறிகள் இரண்டின் பெயரை எழுதுக? :

................................................... , ..............................................

(vi) பந்திக்கு பொருத்தமான தலைப்பு ஒன்றினை எழுதுக? : .....................................

2. கீழுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொல்லின் கீழ் கீறிடுக.

(i) ஆலயத்தினுள் மயில் (கூட்டம் , குழாம்) இருந்தது.

(ii) வெங்காய (இலையை , தாளை) சமைத்து உண்ணலாம்.

3. பின்வரும் வாக்கியத்தை எதிர்கால ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக

பறவைகள் வானில் சிறகடித்துப் பறந்தன.

..........................................................................................................

4. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குப்படுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்றை ஆக்குக.

வகுப்பில் /சிறுவர் /ஒரு /இதழை /அனைவரும் /வெளியிடுவோம் /நாம் /இணைந்து /எமது

..........................................................................................................

5. கீழ்வரும் தொடர்களின் கருத்தினை எழுதுக.

(i) கை தூக்குதல் - ................................................

(ii) தலை கவிழ்தல் - ..............................................

6. பின்வரும் தொடர் வாக்கியத்தினை தனி வாக்கியமாக எழுதுக.
சனுஜன் காலையிலும் , மாலையிலும் பாடம் படிப்பான்.

..........................................................................................................

..........................................................................................................

7. பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இடுக.

கற்பிப்போர் கண்கொடுப்போரே என்பதன் மூலம் நீங்கள் விளங்கிக் கொள்வது எது

8. தொடர்மொழிக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.

பத்திரிகைக்கு செய்தியைத் திரட்டித் தருபவர். :…………………………………….

9. ஓரிடத்தில் என்பதனை பிரித்தெழுதுக? ……………………………………………………

10. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்து சொற்களை எழுதுக.

(i) பதுமை …………………………….. (ii) தையல் …………………………

11. பின்வரும் பழமொழிக்குப் பொருத்தமான கருத்தை எழுதுக.

“பருவத்தே பயிர் செய்” ………………………………………………………………

12. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ் சொற்களை எழுதுக.

(i) Hole puncture ……………………………………………

(ii) Fly ……………………………………………………

13. ஒழுங்குப் படுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக

(i) can/ a/ I/ see/ house : ……………………………………………………..

(ii) canteen/ He/ the/ in/ is : ……………………………………………………

14. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கில சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) மல்லிகை : ………………………………..

(ii) தேங்காய் : ………………………………..

15. (i) அம்மா எத்துலட என்ன. என்ற சிங்கள சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

……………………………………………………………………….

(ii) தம்பி புத்தகம் எங்கே? என்ற சொல் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.

……………………………………………………..


16. ஒன்றினிடம் 5, பத்தாயிரத்தினிடம் 5, நூறினிடம் 7, ஆயிரத்தினிடம் 3, பத்தினிடம் 0 ஆகவுள்ள எண்ணை எழுதுக.

:…………………………………………………………..

17. (i) பின்வரும் எண்களை இறங்கு வரிசையில் எழுதுக.

3086, 7599, 10327, 6171 :…………………………………………………………..

ii) விரித்து எழுதுக. 8087 : ……………. + ……………….+ ...…………+ …………….

18. 

(i) உருவில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியில் ¾ ஐ நிழற்றுக.

(ii) இப்போது நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைத் தசம எண்ணாக எழுதுக.


…………………………………………….

19. பி.ப 8.15ற்கு கொழும்பில் புறப்பட்ட புகையிரதம் அதிகாலை 3.45ற்கு ஹட்டனை வந்தடைந்தது. புகையிரதம் பயணித்த காலம் எவ்வளவு?

:…………………………………………………

20. சதுரம் ஒன்றில் வரையக்கூடிய சமச்சீர் அச்சுகளின் மொத்த எண்ணிக்கையின் நான்கு மடங்கினை உரோம எண் குறியில் எழுதுக?

:…………………………………………………..

21. 


(i) அதிவேக வீதியில் பயணம் செய்த தூரத்திற்கும் பெருந்தெருவில் பயணம் செய்த தூரத்திற்கும் இடையிலான வித்தியாசம் யாது? :……………………………………………

(ii) நகரம் A நகரம் C ற்கு எத்திசையில் அமைந்துள்ளது? ………………………………

22. ஒரு தேயிலைப் பக்கற்றில் 2kg 250g தேயிலை உள்ளது. அவ்வாறான 3 பக்கற்றுகளில் உள்ள தேயிலையின் மொத்த நிறை யாது? : ………………………………


23. ரூபன் ரூபாய் 55.00 வீதம் இரண்டு கொப்பிகளையும், ரூபாய் 85.00ற்கு ஒரு உபகரணப் பெட்டியையும் வாங்கினான். இவ்விரு பொருட்களையும் வாங்குவதற்கு அவனுக்கு செலவாகிய பணம் எவ்வளவு?

: ……..……………………………..

24. யுகேஸ் வீட்டிலிருந்து 100m வடக்கு திசை நோக்கி சென்று அங்கிருந்து கிழக்கு திசையில் 100m சென்று பாடசாலையை அடைந்தான். அவன் பாடசாலையிலிருந்து வீட்டிற்கு அதே பாதையில் வரும் போது எப்பக்கம் திரும்ப நேரிடும்? : …………………………………….

25. ஒரு பெட்டியில் 1454 சிவப்பு முட்டைகளும் இன்னொரு பெட்டியில் 2056 சிவப்பு முட்டைகளும் இன்னொரு பெட்டியில் 786 வெள்ளை முட்டைகளும் இருந்தன. அங்கிருந்த சிவப்பு முட்டைகளின் மொத்த எண்ணிக்கை யாது? :………………………………………….

26. 8cm பக்க நீளமுடைய சதுரத்தையும் 8cm பக்க நீளமுடைய சமபக்க முக்கோணியையும் கொண்டு கீழே தரப்பட்டுள்ள உரு வரையப்பட்டுள்ளது. உருவின் சுற்றளவை காண்க.



------------------------------------

27. கூடையொன்றில் 3kg450g நிறையுடைய பப்பாசியொன்றும் 6kg100g நிறையுடைய பப்பாசியொன்றும் உள்ளன.இரண்டு பழங்களுக்குமிடையிலான வித்தியாசத்தை கிராமில் தருக ………………………

28. புத்தக வியாபாரியான சத்தியஸ்ரீ தன்னிடமிருந்த 138 புத்தகங்களை ஒரு பெட்டியில் 12 வீதம் அடுக்க உத்தேசித்தார். அதன்படி அவருக்கு தேவையான மொத்த பெட்டிகளின் எண்ணிக்கை ?

:…………………………………………..

29.

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| பென்சில் | 02 | 50.00 |
| பேனை | 01 | 35.00 |
| அடிமட்டம் | 03 | 120.00 |
| கத்தரிகோல் | 01 | 75.00 |

சிட்டையில் உள்ள அனைத்து பொருட்களையும் வாங்கிய மஞ்சுளா கடைக்காரரிடம் கொடுத்த பணத்தாளில் 04 பிறைப்புள்ளிகள் காணப்பட்டன. எனின் மஞ்சுளாவிற்கு கிடைத்த மிகுதி பணம் எவ்வளவு?

:…………………………………………

**30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

30. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளின் “திடசித்தம்” எனும் படிமுறையில் நாம் கொள்ளும் உறுதிகளுள் ஒன்று

(i) எனது வகுப்பிற்கும் பாடசாலைக்கும் நான் ஒரு ஒளி விளக்காவேன்.

(ii) எனது வகுப்பிற்கு பாடசாலைக்கு வீட்டிற்கு நான் ஒளியாவேன்.

(iii) எனது உள்ளம் அமைதியுறுவதால் கிடைக்கும் நிம்மதியை உணரட்டும்.

31. கரப்பந்தாட்டம் இலங்கையின் தேசிய விளையாட்டாக பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு

i. 1996 ii. 1991 iii. 1997

32. இடம் மாறிப் பிறந்த வேரில் உணவு சேமிப்பது

i.மரவள்ளி ii.கரட் iii.வற்றாளை

33. எதிரியிடமிருந்து தப்புவதற்காக துளையை ஏற்படுத்தி, நச்சு தன்மையான பதார்த்தத்தை செலுத்துவது,

i.தேள் ii.எறும்பு iii.கணவாய்

34. விற்றமின் D குறைபாட்டினால் ஏற்படும் நோய்களில் ஒன்று

i.என்புருக்கி ii.குருதிச்சோகை iii.மரஸ்மஸ்

35. நல்ல விதை நெல்லை உப்பு நீரில் இட்டால் யாது நிகழும்

i.தாழும் ii.அமிழும் iii.மிதக்கும்


36. பின்வருவனவற்றுள் மின்காந்த அமைப்பைக் கொண்டிராத ஓர் உபகரணம்?

i.வானொலி ii.வீட்டு அழைப்பு மணி iii.மின்மணி


37. இலங்கையில் மின்னுற்பத்தியில் முதன்மையான நீர்வீழ்ச்சி

i.எல்ஜின் ii.லக்ஸபான iii.தியலும

38. கொழும்பில் அரச மரங்களை வெட்டுவதற்கு அன்றைய ஆங்கிலேய அரசு எடுத்த முடிவை எதிர்த்து பௌத்தர்களை ஒன்றுதிரட்டி போராடியவர்?

i. 

ii. 

iii. 

39. வாகனமொன்றில் பின்னால் உள்ள வெள்ளை நிற விளக்கு ஒளிரும் சந்தர்ப்பம்

(i) இருளில் செல்லும் போது (ii) பின்னோக்கி நகரும் போது (iii) நிறுத்தி வைக்கும் போது

40. விமானத்தில் பயணிக்க வேண்டிய பயணி ஒருவர் எவ்வளவு நேரத்திற்கு முன்னதாக விமான நிலையத்திற்கு வரவேண்டும்

(i) 2மணித்தியாலத்திற்கு முன் (ii) 1மணித்தியாலத்திற்கு முன் (iii) 3மணித்தியாலத்திற்கு முன்

41. வடக்கு வானில் ஏழு உடுக்களை கொண்டதும், புவியின் வட திசையை அரிய உதவக்கூடியதுமான உடுத்தொகுதி?

i.ஓராயன் ii.பெருங்கரடி iii.தென்சிலுவை

42. தனது சுய முயற்சியால் பல்வேறு பட்டங்களைப் பெற்றதுடன், சமாதானத்திற்கான நோபல் பரிசை பெற்ற முதலாவது இலங்கையர்?

i.ஆதர்.சி.கிளார்க் ii.பேராசிரியர் முனசிங்க iii.டி.பி.ஜாயா

43. இக்குறியீடு வெளிப்படுத்தும் கருத்தாகக் கருதக் கூடியது,

i பற்பசை தரச்சான்றிதழ் ii சர்வதேச தரச்சான்றிதழ் iii இலங்கை கட்டளைகள் பணியகம்

44. நகரமொன்றுக்கு அருகே குளம் கட்டுவித்த முதலாவது மன்னன்,

i.பராக்கிரமபாகு ii.பண்டுகாபயன் iii.துட்டகைமுனு

45. இலைகளிலும், தண்டுகளிலும் முட்கள் காணப்படும் கீரை வகை?

i.அகத்தி ii.தூதுவளை iii.குப்பைகீரை

46. எல்லே விளையாட்டில் ஒரு குழுவில் இருக்க வேண்டிய வீரர்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை

i.12 ii.14 iii.16


47. இலங்கைக்கே உரித்தான நகருயிரும், மீனினமும் முறையே

i கொம்பு ஓணான், புளு ஒக்லீவ் ii நீர்ப்பாம்பு, மள்புளுட்டா iii ட்ரீ நம்ப், பச்சைப்பாம்பு

48. அவசர அம்புலன்ஸ் சேவை தொலைபேசி இலக்கம்

i.119 ii.1919 iii.1990

49. உருவில் காட்டப்பட்டுள்ளது போன்று சூரியன், பூமி, சந்திரன் ஆகியவை ஒரே நேர்கோட்டில் வரும் தினம்




i.பௌர்ணமி ii.அமாவாசை iii.அட்டமி

50. "பின்னால் ஏறுங்கள்
முன்னே செல்லுங்கள்
உடலில் மோதாது
உடையை மிதிக்காது
முன்னால் இறங்குங்கள்"

இக்கவிதையுடன் மிகவும் தொடர்புடைய கூற்றாக அமைவது?

(i) பேருந்தில் ஏறும் பயணி பின்பற்ற வேண்டியது.
(ii) பேருந்திலிருந்து இறங்கும் பயணி பின்பற்ற வேண்டியது.
(iii) பேருந்தில் பயணிக்கும் பயணி பின்றபற்ற வேண்டியது.

51. இலங்கை மக்களிடத்தே நாட்டுப்பற்றை வளர்க்க உதவிய ஜாதிக தறு நலவிய்ய (தேசிய தாலாட்டு) போன்று பல நூல்களை உருவாக்கியவர்

(i) கலாநிதி சி.டபிள்யு. கண்ணங்கரா (ii) வண.எஸ். மஹிந்த தேரர் (iii) அனாகரிக தர்மபால

52. பாம்பு தீண்டப்பட்ட ஒருவருக்கு செய்ய வேண்டிய முதலுதவி ஒன்றல்லாதது

(i) காயம் இடப்பட்ட இடத்தை சவர்காரமிட்டு ஓடும் நீரினால் கழுவுதல்
(ii) பால்/நீர் பருக கொடுத்தல்
(iii) உடலை அசைக்காது, தலை,தோள்களை உயர்வாக பேணுதல்

53. "ஆனகட்டி ஏலேப்படி சேர்குழப்பி அயிறு சம்பா ஏலேப்படி நாத்து நாட்டு…." எனும் பாடல் எவ்வகைக்குரியது ?

(i) அருவி வெட்டுப்பாடல் (ii) சேனைப்பாடல் (iii) கமக்காரன் பாடல்

54. தென் மாகாணத்தில் அமைந்துள்ள பிரசித்தமான ஓர் இடம்?

(i) களனி பாலம் (ii) காலிக் கோட்டை (iii) பலாலி விமான நிலையம்

55. இரவு வானில் தென்படும் இயற்கை பொருள் ஒன்று?

(i) கதிரவன் (ii) தாரகை (iii) வானவில்

56. பண்டைய காலத்தில் தகவல் பரிமாற்றம் செய்த முறைகளில் ஒன்றல்லாதது?

(i) அம்பினால் எய்தல் (ii) ஈட்டியினால் எய்தல் (iii) தூதுவர்கள் மூலம்

57. எமது உதடுகளின் இணைப்போரங்களில் வெடிப்புகள் தோன்றுவதற்கான காரணம்

(i) புரத குறைபாடு (ii) விற்றமீன்B குறைபாடு (iii) விற்றமீன்D குறைபாடு

58. குறைவான அளவு நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம்

(i) தொண்டை ஈரளிப்பு (ii) உடல் தளர்ச்சி (iii) சிறுநீர் கழித்தலில் சௌகரியம்

59. பழைய கற்பாலம் அமைந்துள்ள மாவட்டம்

(i) பொலனறுவை (ii) மாத்தளை (iii) அநுராதபுரம்

60. ஒழுக்கம் ஒரு மனிதனின் உயிரை விட மேலானதொன்றாக கருதப்படுகிறது. மாணவர்களாகிய நாமும் ஒழுக்கத்துடன் செயற்பட வேண்டும், என்பதற்கு ஏற்ப " எம்மிடம் காணப்பட வேண்டிய நற்பண்புகள்" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலை, தொடர்புகள் சரியாகவும், ஐந்து சொற்களுக்கு குறையாமலும் இருக்க வேண்டும்.

1……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

2. ……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………...

3. ……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………...

## விடைகள்

## வினாத்தாள் - 1

| | | | |
|---|---|---|---|
| 01. 02 | 21. 03 | 31. 02 | 11. 02 |
| 02. 02 | 22. 03 | 32. 01 | 12. 03 |
| 03. 03 | 23. 03 | 33. 03 | 13. 02 |
| 04. 02 | 24. 03 | 34. 03 | 14. 03 |
| 05. 02 | 25. 01 | 35. 03 | 15. 03 |
| 06. 02 | 26. 02 | 36. 03 | 16. 02 |
| 07. 03 | 27. 03 | 37. 02 | 17. 02 |
| 08. 02 | 28. 02 | 38. 02 | 18. 03 |
| 09. 03 | 29. 03 | 39. 02 | 19. 03 |
| 10. 01 | 30. 01 | 40. 03 | 20. 03 |

# வினாத்தாள் - 2

01. 01. தவளை
02. பெரிய
03. சுறுசுறுப்பாக
04. லபக் லபக்
05. முற்றுப்புள்ளி, காற்புள்ளி, மேற்கோட்குறி
06. தவளையும் தன் வாயால் கெடும் / தவளையும் பாம்பும் (6 புள்ளிகள்)

02. 01. குழாம் 02.தாளை (2 புள்ளிகள்)

03. பறவை வானில் சிறகடித்துப் பறக்கும். (1 புள்ளிகள்)

04. நாம் அனைவரும் இணைந்து எமது வகுப்பில் ஒரு சிறுவர் இதழை வெளியிடுவோம் (2 புள்ளிகள்)

05. 01. துன்பத்தில் உதவுதல் 02. வெட்கமடைதல் (2 புள்ளிகள்)

06. சனுஜன் காலையில் பாடம் படிப்பான் , சனுஜன் மாலையில் பாடம் படிப்பான (2 புள்ளிகள்)

07. "கற்பிப்போர் கண்கொடுப்போரே" என்பதன் மூலம் நீங்கள் விளங்கிக் கொள்வது எது? (1புள்ளிகள்)

08. நிருபர் (1 புள்ளிகள்)

09. ஓர் + இடம் (1 புள்ளிகள்)

10. 01. பொம்மை 02. பெண் (2 புள்ளிகள்)

11. எச்செயலையும் காலம் கருதி செய்ய வேண்டும். (2 புள்ளிகள்)

12. 01. துளைக்கருவி 02. ஈ (2 புள்ளிகள்)

13. 01. I can see a house 02. He is in the canteen (2 புள்ளிகள்)

14. 01. Jasmine 02. Coconut (2 புள்ளிகள்)

15. 01. அம்மா உள்ளே வாருங்கள் 02. மல்லி பொத கொஹேத? (2 புள்ளிகள்)

16. 53705 (2 புள்ளிகள்)

17. 01. 10327,7599,6171,3086 02. 8000 + 0 + 80 + 7 (4 புள்ளிகள்)

18. 01. மேலும் 6 பகுதிக்கு நிழற்ற வேண்டும் 02. 0.2 (2 புள்ளிகள்)

19. 7 மணித்தியாலம் 30 நிமிடம் (2 புள்ளிகள்)

20. XVI (2 புள்ளிகள்)

21. 01. 105m 02. வடமேற்கு (4 புள்ளிகள்)

22. 6750g (2 புள்ளிகள்)

23. 195.00 ரூபாய் (2 புள்ளிகள்)

24. இடபக்கம் (2 புள்ளிகள்)

25. 3510 (2 புள்ளிகள்)

26. 40 cm (2 புள்ளிகள்)

27. 2kg 650g (2 புள்ளிகள்)

28. 12 (2 புள்ளிகள்)

29. ரூபாய்.220.00 (2 புள்ளிகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30. 2 | 35. 2 | 40. 3 | 45. 2 | 50. 3 | 55. 2 |
| 31. 2 | 36. 1 | 41. 2 | 46. 3 | 51. 2 | 56. 3 |
| 32. 3 | 37. 2 | 42. 2 | 47. 2 | 52. 2 | 57. 2 |
| 33. 2 | 38. 2 | 43. 3 | 48. 3 | 53. 2 | 58. 2 |
| 34. 1 | 39. 2 | 44. 2 | 49. 2 | 54. 2 | 59. 3 |

(30 புள்ளிகள்)

60. பொருத்தமான வாக்கியமாக அமைதல் வேண்டும் (06 புள்ளிகள்)